புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி, இன்றோடு 3 ஆண்டுகள் வெற்றிகரமாக அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அக்கல்லூரியில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றனர். அந்த ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி ஒன்றை கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்மீது கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

திருக்கோயில் திருப்பணி

***5558—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் அருள்மிகு ஸ்ரீலஷ்மி நாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2019 ஜனவரி 7]

(அ) மற்றும் (ஆ) தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஸ்ரீலஷ்மி நாராயணப் பெருமாள் திருக்கோயில், அருள்மிகு நைனாமலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயிலில் மராமத்து செய்யும் பணி, சுற்றுப்புற கருங்கல் தரைதளம், கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.36 இலட்சம் செலவில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை ஆணைய பொது நிதிமூலம் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நிருவாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படும். மேலும், இத்திருக்கோயிலில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் உற்சவர் மண்டபம் கட்டும் பணிக்கு தொல்லியல் துறை வல்லுநர்களின் கருத்து பெற்று, மாண்புமிகு உயர் நீதிமன்றம் அமைத்த குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்ட பின், மதிப்பீடுகள் தயார் செய்து, திருப்பணி செய்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற தாரக மந்திரத்தோடு, தமிழக மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, இன்றைக்குத் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று, இன்று நம்மிடத்திலே இல்லை என்றாலும், மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம்பெற்றிருக்கின்ற நம்முடைய இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அத்தனை திட்டங்களையும் நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற வகையில், அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட, அருள்மிகு ஸ்ரீலஷ்மி நாராயணப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்காக ஏற்கெனவே கேட்கப்பட்ட கேள்வி இது. இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கத்தின் சார்பாக 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உற்சவர் மண்டபம் கட்டும் பணிகள் கூடிய விரைவில் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கொல்லிமலை அடிவாரம் வேலுக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கூகைமலை பழனியப்பா திருக்கோயில் திருப்பணிக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணியினை விரைவாக முடித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேந்தமங்கலம் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் திருப்பணியை இந்த ஆண்டே தொடங்கிட வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகளைத் தொடங்கிட முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலுக்குறிச்சி பகுதியில் அமைந்துள்ள கூகைமலை அருள்மிகு பழனியப்பா திருக்கோயிலில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் மற்றும் தாங்கும் சுவர் கட்டும் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 60 சதவிகிதப்*

2019 ஜனவரி 7]

பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் மூன்று மாத காலத்திற்குள் நிறைவுபெற்று, இத்திருக்கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் தொடர்பாக தொல்லியல் துறை தனது கருத்துருவை வழங்கியுள்ளது. திருப்பணிகள் தொடர்பாக மதிப்பீடுகள் தயார் செய்து மாண்புமிகு உயர் நீதிமன்றக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்று இந்த மாமன்றத்தில் அறிவித்த மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத ஒரு சிறிய கேள்வி. கிராமப்புறங்களில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மலைப் பகுதிகளைப் பொறுத்தவரை, அங்கேயிருக்கின்ற கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படைப் பொருட்களை வாகனங்களில் கொண்டு செல்வதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது. எனவே, ஒரு இலட்சம் ரூபாய் என்கின்ற அந்த நிதியொதுக்கீட்டினை மலைப் பகுதிக்கு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய தற்போது ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 1,000 திருக்கோயில்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நிதி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதிகளில் அந்த நிதியை ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தித் தருமாறு கோரிக்கை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விளையாட்டுத் திடல்

***13135—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, 75–வது வட்டத்தில் உள்ள சிவசண்முகபுரம் A பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?